# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

**சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.**

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரு. | 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, ரு. | 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, ரு. | 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரு. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரு. 5-00 |
| ,, | காற்கலம் | ரு. 3 15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேை விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரி ஆ கார்த்திகை ௨௮௨ (1923 டிசெம்பர் 13) வியாழக்கிழமை. { இலக்கம்—௪௫.


DUPLICATE

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது துங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்முள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

யாழ்ப்பாணம்

சைவபரிபாலனசபையாராற்

பிரசுரஞ் செய்யப்பெற்ற

## புத்தக விளம்பரம்.

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது) | ௧௦ |
| இரண்டாம் பாலபாடம் ,, | ௧௫ |
| மூன்றாம் பாலபாடம் ,, | ௨௦ |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩௦ |
| ஐந்தாம் பாலபாடம் ... .... .... | ௪௦ |
| ஆறாம் பாலபாடம் .... ... ... | ௬௦ |
| கலாமஞ்சரி எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல் லீவிங் சேர்ட்டிவிற்கத்"வகுப்பிலும் பயிலும்மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும்வண்ணம் இடம்பெற்றுள்ளது. விளக்கத்துடன் | ௨௫ |
| கலாமஞ்சரிவிளக்கம்(மாத்திரம்) | ௩௦ |
| கிருட்டிணன்றூது, உரையுடன் | ௮௫ |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை .... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... .... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)... ... ... | ௧௨ |
| இலக்கண வினாவிடை... ... ... | ௧௦ |
| நிகண்டு ௧௧-வதும் ௧௨-வதும்... | ௨௫ |
| திருவாதவூரடிகள்புராண மூலம்... | ௨௫ |
| திருச்செந்தூர்ப்புராணவுரை | |
| கிளேஸ்காகிதம் ... ... ... | ௧-௨௫ |
| றவ்காகிதம்... ... ... ... | ௧-௦௦ |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | ௧௦ |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | ௧௨ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | ௧௨ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | ௧௦ |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ... ... ... ... ... | ௧௦ |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | ௭ |
| குமணசரித்திரம் ,, | ௭ |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | ௧௦ |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | ௧௦ |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது ஏட்டுப்பிரதியின்படி அச்சிடப்பெற்றது... ... ... ... ... | ௧௫ |
| மறைசையந்தாதி ... ... ... | ௨௦ |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்

சபையாராலச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், M. S. துரை, பிறிற்றனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தகசாலை முதலிய இடங்களிலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப் பிள்ளை, வீ. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை,

---

[ESTABLISHED 1909].

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*SouthArcotDistrict*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லா இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஒளஷத பாகங்களிற் சிறந்ததும், தாதுவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடிய இமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள்; நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபால்செலவு இல்லை. பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். மேதூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது சிட்டுக்குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

| | |
|---|---|
| Telegraphic Address<br>Khader Brothers<br>Porto-Novo.<br>(Y. 19,) | என் மேல்விலாசம்:—<br>மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ காதர் பிரதர்ஸ்,<br>கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,<br>பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா. |

---

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!

விலைசரசம்! உடைநயம்!! அருமையான திஹுசு!!!

## சேலம் ஜவுளி திஹுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான திஹுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாக பிடித்தமுள்ள திஹுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, தயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள், பச்காஞக்களும், நயம் 120 செ. 100 செ. 80 செ. நூலில் பலகலர் பட்டினுலும் வெள்ளி ஜரிகையினுலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டினுலும் ஜரிகையினுலும் பலவிதமான முந்திகள்போட்டதும் முந்தியில்சிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி, துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமுந்தியில் ஜரிகையினுல் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிகைக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா திஹுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் நெசவு அழுத்தமாகவும் கோட்டமுள்ளதாகவும் அருமையான திஹுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. திஹுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு திஹுசு பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| தந்திவிலாசம்,<br>ஜவுளி சேலம்,<br>Javuli Salem. | கா. கோ. அ. வெ. கு. ஒபுளிசெட்டியார் & Co,.<br>ஜவுளிவியாபாரம் கொகை சேலம். |

(Q. 44)

---

காகிதாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லிகைப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினுல் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

---

உலகமேங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

### மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

மூலத்திற்கு

### குருநாகபஸ்பம்

ஆப்றேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; கீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாத முள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

இருமலுக்கு

### குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு காட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

### பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறுது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மேடல்கள் பெற்ற

C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மேடிக்கல் ஹால்,
(H. 19). பழனி. S. I.

---

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

புஷ்டிக்கு கைகண்ட

### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷிக்க ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஒளஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரூ. 10. 50 பில்ஸ் ரூ. 4-0-0
20 பில்ஸ் ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரூ. 2.

### பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரூ 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q 41 லைத்) தியசாலை,பழனி. S. I.

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருத்ரோற்காரி௵ கார்த்திகைமீ 28௳ வியாழக்கிழமை.

## "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே."

இவ்வுலகில் பதினாறு பேறும் பெற்று வாழ்வதிலும், அரசனாகி வாழ்வதிலும், சக்கரவர்த்தியாக வாழ்வதிலும், மண்டலாதிபதியாக வாழ்வதிலும், திரிலோகாதிபதியாக வாழ்வதிலும் பார்க்க மிகச் சிறந்ததும் செல்வத்துட் செல்வமாகப் பொருந்தியதும் தில்லைச்சிற்றம்பலமேய செல்வன் கழலேத்தும் செல்வமேயாம். அநந்த கோடி ஜென்மபுண்ணிய விசேடத்தினால் எடுத்துக்கொண்ட இம்மானிட தேகமானது ஒருவன் தன்னுடைய பகையை நீக்கும்பொருட்டு அருந்தவம் செய்து பெற்ற மந்திரவாளுக்குச் சமானமாகவிருக்கிறது. இடையீடின்றித் தொடர்ந்து வருவதாகிய பிறவிப்பெருங்கடலென்னும் பகையை இம்மானிட தேகம் எடுத்த சமயத்தும் நீக்காதிருப்பவர்கள் பகையை நீக்கும் ஆற்றலையுடைய அம்மந்திரவாளினால் தனது பகையை நீக்காது வீணே காலங்கழிப்பவனை நிகர்ப்பர். அம்மந்திரவாளினாலே தனது பகையை நீக்காதிருந்ததோடமையாது அவ்வாளினாற்றானே தன்னுடைய கழுத்தை அறுத்துக் கொள்ளும் ஒருவனைப்போல, இம்மானிட தேகத்தைப்பெற்றவர்கள் தாங்கள் அடையவேண்டிய செல்வமாகிய செல்வன் கழலேத்தும் பெருஞ் செல்வத்தைப் பெறுதொழிந்து, மாடு மக்கள் சுற்றம் பெண்டிர் மாளிகை நாடு அரச வாழ்க்கை முதலானவற்றிலே மயங்கித் தங்கள் கடமையை மறந்துவிடுகிறார்கள். சாட்க்ஷாத் பரம்பொருளாய் விளங்கும் ஸ்ரீ நடராசப் பெருமானாகிய அருள்வள்ளலார் தந்தையாயும் தாயாயும் தாரமாயும் மகவாயும் பந்தமாயும் வீடாயும் பரப்ரம வஸ்துவாயுமிருப்ப அவன்கழலேத்தும் பெரும்பேற்றைப் பெற விரும்பாதவர்களாய் மாடமாளிகை கட்டவேண்டுமென்று கடலேறியும் மலையேறியும் பெரும் பொருளீட்டிப் படாத பாடெல்லாம் படுகிறார்கள். சர்வஜன மதிப்புடைய உத்தியோகம் வேண்டுமென்று மேலதிகாரிகளுடைய கடைவாயில்தோறும் ஒடுக்க வணக்கத்துடன் நின்று குறையிரக்கிறார்கள். நற்குண நற்செய்கைகள் இல்லையேனும் அழகு வாய்ந்த மனைவி வேண்டுமென்றும், அவ்விதமான மனைவி கிடைக்கப்பெற்றால் அதுவே ஜென்மசாபல்யம் என்றும் நினைத்துவிடுகிறார்கள். ஒருவரை யொருவர் கெடுப்பதிலும், கோள் சொல்லுவதிலும், ஒருவர் வாழ்வைக் கண்டு வயிறெரிவதிலும், பிறரை வசை மொழிகளினால் தூற்றுவதிலும் கண்ணுங் கருத்துமா யிருக்கிறார்கள். அந்தோ! இவ்வித செய்கைகளுக்காக இம்மானிட தேகமானது கொடுக்கப்படவில்லையே; உலகத்திலே உள்ளனவற்றில் எதை எதை விரும்பிக் கேட்டாலும் அதை அதைக் கொடுப்பதற்கு அச்சிவ பரம்பொருளிருக்கிறது என்ற இக்கருத்தமைய "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" எனத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந் தருளியிருக்கிறார். மின்னலுக்குச் சமானமாகத் தோன்றி அழியும் விடயப் பொருள்களில் மனதைச் செலுத்தி வாழ்நாளையும் வீண் நாளாக்கிச் சென்மங்கடோறும் பிறந்து இறந்து உழலுவதிலும்பார்க்க செல்வத்துட் செல்வமாகிய செல்வன் கழலேத்தும் செல்வத்தையே அடைதற்கு முயலுதல்வேண்டும். அதுவே அருட்செல்வமாகும். அதனை அடைவதற்கு மானிட தேகம் எடுத்தவர்கள் செய்ய வேண்டிய கடமை யாதெனில் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றபடி அவனடிக்கு அடிமைத் தொண்டு செய்வதேயாம். நிற்க,

எமது தாய்தந்தையர்கள் முந்தித் தவங்கிடந்து முந்நூறுநாட்சுமந்து பாடுபட்டுப் பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்டதற்காக அவர்களை வணங்குகிறோம். அவர்கள் தளர்ச்சியடைந்தகாலத்திலவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து உணவாதியனவூட்டுகிறோம். ஏனெனில் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று ஆன்றோர் கூறியிருப்பதனாலேயாம். அத்தாய் தந்தையர்களுடைய கதிதான் என்னவென்று சிறிதாராய்வாம். எனக்குத் தாயானவள் என்னை இங்கே விடுத்து தனக்கொரு தாயைத் தேடிச் செல்கின்றாள். இவ்வாறுசெல்லும் அவளுக்குத் தாயானவளுடைய கதியும் அதுவேயாகும்.

இந்த ஒரு பிறவியில் எமது தாய் தந்தையர்கள் எமக்குச் செய்த நன்மைக்காக எவ்வளவோ கடமைகளை அவர்களுக்குச் செய்வோமாயின் நாம் எடுத்த எடுத்த ஜெனனங்கள் தோறும் எமக்குப் பரமபிதாவாகவும் உலக மாதாவாகவுமிருந்து எம்மை முத்தியின்பத்திற் சேர்க்கவேண்டுமென முகிழ்த்த பெருங்கருணைத்தடங் கடலாகிய அந்தப்பரமேசுவரனுக்கும் பரமேசுவரிக்கும் நாம் எவ்வளவோ கடமை பூண்டவர்களாக விருத்தல் வேண்டும். அவர்களே எமது உண்மைத்தாய்தந்தையரென்றகருத்தமைய "விடையதூர்திறைபே தாதை மற்றவன் பால்விளங்கிய மின்னெ மதன்னை" என ஆன்றோர் கூறிப் போந்தனர். இத்தேக அநித்தியத்தையும் உலகவாழ்க்கையையும் உற்றுணர்ந்த மகான்கள் "காயமிலையல்லவென்று காண்பாருறங்குவரோ" எனக்கூறினர். "தனித்துணை நீநிற்கயான்தருக்கித்தலையால் நடந்தவினைத்துணையேன்" என்றார் மணிவாசகப்பெருமானும். எந்தெந்தப் பிறவியிலும் என்றென்றைக்கும் எந்தெந்தகோத்திலும் ஒப்பு உயர்வு அற்றதுணையாய் எமதுபரமபிதாவானவரிருப்ப அப்பரம்பொருளை மனம் வாக்குக் காயமொத்து வணங்காது விடுத்து இப்பிரபஞ்சத்தில் மூழ்கி வினைகளைத் துணையாகப் பிடித்துக்கொண்டு தேடிக்கிடைத்தற்கரிய இப்பொன்னனமானிடதேகத்தைஒருவித பிரயோசனமுமின்றி வீணாக்குதல் ஒருபோதுங் கூடாதே.

ஆதலின் மானிடதேகம் எடுத்தோர் செல்வன் கழலேத்தும் அப்பெருஞ் செல்வத்தைப் பெறுதலே தப்பாத விசேட கடமையாகும்.

## ஆன்ம விசாரம்.

(ஓர் பிராமணோத்தம ஸாது எழுதியது)

பாக்கியவான்: இயற்கையிலே தான் செல்வனாயினுமென்! வறியனாயினுமென்! தனக்கு ஈசுவரன் இட்ட சுகதுக்க நிலைமையிலே திருப்தியுடையவன் பாக்கியவான். அதில் திருப்தியில்லாது குறைகூறி முறுமுறுக்கிறவன் அற்பன்.

அருளாவது நோயாளிகண்மேலும் அவர்களுக்கு அந்நோயைப் பரிகரிக்கும் தருமவைத்தியன்மேலும் உளதாய இரக்கம். நோயென்றது அஞ்ஞானம். அருள் நோயாளிகளிடத்து அவர்கள்வருந்துவது கண்டு சகியாமையால் உளதாகின்றது. வைத்தியனிடத்து அந்நோயை மாற்றி உய்விக்கும் தயாளம்பற்றி உளதாகின்றது.

தன்மேலே யாவரும் பற்றுள்ளவராயிருக்கின்றனர். ஆதலால் அதுபோலவே மற்றை உயிர்களிடத்தும் ஈசனிடத்தும் பற்றுள்ளவராய் எவர்களும் இருக்கவேண்டியது. நடுவுநிலைமையுடையவன் இப்படி ஒழுகுவான்.

பிறரிடத்தே குற்றங் கண்டு கண்டிக்கிறது அவர்களைவருத்துவதாயிருக்கிறது. ஆதலால் அந்த இம்சையை நாம் ஏன் செய்யவேண்டும். அதற்கெல்லாம் அதிகாரி ஈசுவரன். அவர் குற்றங்களில்லாதவர். நாம் கோபம் பொறாமை முதலிய துர்க்குணம் உடையேம். ஆதலால் நாம் செய்யும் கண்டனம் அக்குற்றம்பற்றியதாயிருக்கும்.

பிறரை நாம் குற்றம்பற்றிக் கண்டிப்பது அவர் நயத்துக்காயின் அவர் நம்மிடம் திருத்தம் செய்யும்படி வேண்டிக்கொண்டாலன்றோ அது கூடும். வேண்டினும் எம்மிடத்திற் கோபம் பொறாமை முதலிய துர்க்குணமுண்டாயமட்டும் அது தகாது.

நாம் பிறரைக் கண்டிப்பதெல்லாம் நமக்குத் துன்பம் நிகழாமைக்காகவேனும், இன்பத்துக்காகவேனுமாயிருக்கின்றது. ஆதலால் அக்கண்டனம் நமது கோபம் பொறாமைகளைச் சகிக்கமாட்டாமைபற்றி நிகழ்வது ஆதலின் அது தகாது.

ஈசுவரன் ஆன்மாக்களோடு எப்படி நடக்கிறாரோ நீயும் அவர்களோடு அப்படி நட.

தன் ஆன்ம ஈடேற்றங்கருதி ஒருவனிடத்து உளதாகும் குணத் திருத்தமே திருத்தம்; அச்சம்பற்றியாதல் உலக மதிப்புக்கருதியாதல் உளதாகும் குணத்திருத்தம் திருத்தமன்று.

ஆன்ம ஈடேற்றங் கருதாத ஒருவனுக்கு இயற்கையில் அமைந்துள்ள குணத்திருத்தம் யாதும் உண்டாயின் அது மதிப்புக்கிடமானதல்ல.

நீ பிறரை யாதும் குற்றங்கண்டு அவமதிப்பாகக் கணிக்கும்போது அத்தகைய குற்றங்களாற் திருந்தும்வந்த உனது நிலைமைக்கு ஈசனிடம் நன்றியறிதலாயிரு. அக்குற்றமுடையார்கள்மேல், திருத்தம் வாராத அவர்கள் நிலைமைக்காக இரக்கம் உடையவனாயிரு.

பகைமையும் கலகமும் மனச்சஞ்சலமும் அவாவும் ஆகிய இவைபோலும் கெடுதிகளெல்லாம் ஒவ்வொருவருக்கும் தத்தம்மிடத்துள்ளனவல்லாமற் பிறராற் சம்பவிப்பனவல்ல.

ஒவ்வொருவருக்கும் தத்தமக்குப் பகைவன் தத்தம் அஞ்ஞானமேயல்லாமல் பிறஜீவர்களல்ல.

மனக்கோட்டம் உடையவர்களுக்கு எங்கு போய்த் தப்பலாம் எங்கிலையில் உய்யலாமென்றாலும் அங்கும் கெடுதிகள் சம்பவித்துக்கொண்டேவரும்.

உனக்கு ஒருவன் தீங்குசெய்ததன்நிமித்தமாக அவனைக் குணக்கேடன் என்று நீ கண்டிப்பது பெரும் மடமை. அதை நீ யார்நன்மை கருதிச் செய்கிறாய்?

உன்னுடைய வசதிகளுக்கு இசையாததனிமித்தமாக ஒருவனை யோக்கியனல்லன் என்றிகழ்வதும் பேதைமை. அதுவும் யார்பொருட்டுச் செய்கின்றாய்?

உனக்கு ஒருவன் துன்பஞ் செய்தபொழுது அதைத் தீங்கென்று ஒப்புக்கொண்டதில் நீ குற்றவாளி.

உனக்குப் பிறன் சுகம் விளைத்தபொழுது அதை நன்மையென ஒப்புக்கொண்டதிலும் நீ குற்றவாளி.

எனக்குத் தீங்குசெய்தஒருவனை எனது தந்தையாகிய ஈசுவரன் வெறுக்கிறாரா! அவருக்கில்லாத வெறுப்பு எனக்கேன்?

நாம் சீவர்கள் மேலே கோபம் பொறாமை முதலிய துர்க்குணம் ஆளுமட்டும் அவையெல்லாம் ஈசுவரன்மேலே செய்வனவாம். ஈசுவரனிடத்தே தூயனாயிருக்க வேண்டியவன் சீவர்களிடத்தே அவற்றை ஒழித்தல்வேண்டும்.

நாம் சீவர்கள்மாட்டு வைக்கும் பிரீதியாயினும் வெறுப்பாயினும் எல்லாம் சீவர்களுக்கல்ல; ஈசனுக்கே.

உனக்கு நேரிடும் எவ்வித சங்கடங்களையும் ஈசனே வைட்டுவதாக ஒப்புக்கொள்; உனது திருத்தத்துக்காக.

ஈசன் நமக்கு எதை வைட்டுகினும் சீவர்கள் மூலமாகவே அதைச் செய்யவேண்டியிருப்பதால் சீவர்களை நோக நியாயமில்லை

மதிப்புப் பிரீதி ஒன்று. இது அகங்காரம். அநுபவத்தில் பிரீதி ஒன்று.

மதிப்புக்கும் அநுபவத்திற்கும் ஆக்கம் பயப்பதில் உளதாவது விருப்பு.

இவ்விரண்டற்கும் கேடு பயப்பதில் உளதாவது வெறுப்பு.

தான் தனக்கு மதிப்பை வேண்டிக்கொள்வதால் அதில் மேற்படும் பிறசீவரில் உளதாவது அழுக்காறு.

கோபம் அழுக்காறு களிப்பு மதிப்பு செருக்கு முதலிய துர்க்குணம் மீறி அடாத கூறுவாரையும் செய்வாரையும் ரோகம் மேற்கொண்ட நோயாளியென இரங்கு. அல்லது, பைத்தியம் மேற்பட்ட பித்தன்போல மதித்து இரங்கு.

## அறிவிலார்க்குரைப்பவர் அவரிற் பேதையர்.

சிவகாருண்யமே வடிவாகப் பொருந்திய சந்நியாசியொருவர் தமது காலைக்கடன்களை முடித்துக்கொண்டு ஆற்றோரமாகச் செல்லும்பொழுது ஆற்றிலே மீன்பிடித்துக்கொண்டிருக்கும் ஒருவனைக் கண்டார். அவன் வலை வீசுவதையும் மீன்களைப் பிடித்து அனாயில் மாட்டியிருக்கும் பறியிற் போடுவதையும் மீன்கள் பதைத்துத் துடிப்பதையும் கண்டு அவனுடைய அறியாமைக்காகத் துக்கப்பட்டு மிக அன்புடனும் ஆதரவுடனும் அவனுடைய பக்கத்திற் சென்றார். (தன்னிடத்திலே மீன் வாங்க வருகிறாரென நினைத்த) வலைஞன் "ஐயா, ஆற்றிலே தண்ணீர் வற்றியமையினால் நான் பிடிக்கும் மீன் எனக்குத்தானும் போதியதன்று; உமக்கு மீன் தரமாட்டேன்" என்றான். அதுகேட்ட சந்நியாசி அவனுடைய அறியாமையைநினைந்து அவனைப்பார்த்து "அப்பா, எனக்கு மீன் வேண்டியதில்லை. நான் சொல்வதை மாத்திரம் சற்றுவேளைகேட்பாயாக. "நீ சிவகாருண்ணியம் கொஞ்சமேனு மில்லாமல் இந்த அற்ப பிராணிகளைக் கொல்லுகிறாயே? நீ எப்போ இந்தப் பிறவிப் பெருங் கடலினின்று கரை யேறுவாய்?" எனக் கேட்டார். வலைஞன் "ஐயா, என்னுடைய பறி நிரம்பியவுடன் கரையேறுவேன்" என விடைகூறினான்; சமயவுணர்ச்சி அற்பமுமில்லாது தின்று குடித்துக் கொண்டாடி இறப்பதே மோக்ஷம் என நினைப்பவர்களிடம் செய்யப்படுஞ் சமயபோதனையும் மேற்படிசந்நியாசி மீன்பிடிகாரனுக்குச்செய்தபோதனைபோலவேயிருக்கும்.

## நடந்து செய்தாற் குற்றம் இருந்து செய்தாற் குற்றமாகாதா?

தெருவழியே செல்லும் ஒரு பிரபுவின் மீது ஒருவன் தெருவிலுள்ள சேற்றை வாரி எறிந்தால் அப்பிரபுவுக்கு அடங்காத கோபம் மூண்டுவிடுகிறது. அவ்வாறு செய்வதைச் சந்திகளிலுள்ள பொலிசார் கண்டுவிட்டால் உடனே அவனைப் பிடித்துப் பொலிஸ்தானத்திற்குக் கொண்டுபோய் அவன்மேல் வழக்குத் தொடர்ந்து அவனைக் குற்றவாளியாக்கி அபராதமிறுக்கும்படி செய்துவிடுகிறார்கள். அக்குற்றவாளி மோட்டோர் வண்டியிலேறிக்கொண்டு செல்லும்பொழுது பக்கத்தில் நடந்து செல்லும் பிரபுவின்மீது அவ்வண்டி வாயிலாக வெள்ளமும் சேறும் வீசப்படுமாயின் பிரபுவுக்கும் கோபம் ஒருபோதும் வரமாட்டாது. சந்தியில் நிற்கும் பொலிஸ்காரனும் அவன் குற்றஞ் செய்யவில்லையென்று நினைத்து அவன் போகவேண்டிய திசையை அறிந்து கையை நீட்டிக் காட்டிச் சலாம் செய்து வழிவிடுவான். ஆராய்ந்து பார்க்குமிடத்து நடந்துசெய்வதே குற்றமாகக் காணப்படுகிறது. இருந்து செய்வது குற்றமல்லவென்று எண்ணப்படுகிறது. "சிறியது பெரியதுக்கிரை" என்பதே கலியுகத்திற் கொள்ளப்படும் முறையாகுமென மனுதர்ம சாஸ்திரம் கூறுகிறது. "கடவுள் மனிதனுடைய உபயோகத்துக்காகக் குதிரையைப் படைத்தார்; மனிதவர்க்கத்தினுடைய அழிவுக்காக மோட்டோர் ரதம் பசாசினாற் கண்டுபிடிக்கப்பட்டது. (God created horse for the use of mankind, but devil invented motor car for the destruction of mankind) என ஒரு ஜெர்மனிய கவிசிரேஷ்டர் கூறியிருக்கிறார். என்னே கலியின் வலி!

## சமாசாரம்.

காலநிலை:—இடையிடையே நன்மழை வருஷிக்கிறது. ஒருவித குளிர்காற்று வீசுகிறது.

அரசினர் சன்மானம்:—தொடுவாய் இராச்சியத்தைச் சேர்ந்த வைத்தியப்பகுதியில் 32 வருடகாலம் கடமைபார்த்து இளைப்பாறியிருப்பவரும் வண்ணார்பண்ணை பிரசித்த நொத்தாரிஸ் ஸ்ரீ எஸ். சபாபதிப்பிள்ளை அவர்களின் சகோதரருமாகிய ஸ்ரீ எஸ். ஆறுமுகம் அவர்களுக்கு ஐ. எஸ். எம். (Imperial Service Medal) என்னும் சன்மானப் பதக்கம் இந்த டிசெம்பர்மீ 4௳ மல்லாக நீதிஸ்தலத்திலே வடமாகாண ஏசண்டர் அவர்களாற் கொடுக்கப்பட்டது. அத்தருணம் ஸ்ரீ ஆறுமுகம் அவர்களுடைய நண்பர்களாகிய பிரபுக்கள் யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலுமிருந்து வந்து சமுகமளித்தனர்.

வயிற்றுளைவு:—பலாங்கொடைப் பகுதியில் வயிற்றுளைவுநோய் பரவுவதாக அறியப்படுகிறது.

புதிய சமாதான நீதிபதி:—மிஸ்டர் எம். பரராசசிங்கம் அவர்கள் கொழும்புப் பகுதிக்குச் சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றிருக்கின்றனர்

ஒரு தோட்டத்துரை ௯ மாச மறியல் விதிக்கப்பட்டார்:—கண்டியில் பொகாவலா என்னும் தோட்டத்தில் சுப்பிறின்ரென்றனாயிருந்த மிஸ்டர் எஸ். சி. பெர்னண்டோ என்பவர் ஒரு செட்டியை அனுப்பினார் என்ற குற்றச்சாட்டில் 9 மாச மறியல் விதிக்கப்பெற்றார்.

புகையிரதம் பஸ் வண்டியோடு மோதினமை:—சென்ற ஞாயிற்றுக்கிழமை இரத்தினபுரியிலிருந்து புறப்பட்ட புகையிரதத்தொடர் அவிசாவலைக்கும் பூவாக்பிட்டிக்கும் இடையில் ஒரு பஸ்வண்டியோடு மோதியது. அப் பஸ்வண்டியிலிருந்த ஒருவன் பெருங்காயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டான்.

வெடிமருந்தினால் நேர்ந்த மரணம்:—அம்பம்புஞாவிலுள்ள கற்குழியில் கூலியாட்கள் வேலைசெய்துகொண்டிருக்கும்பொழுது கற்களுக்கிடையில் வைக்கப்பட்டிருந்த பழைய வெடிமருந்து வெடித்ததினால் ஒருவன் உடனே உயிர்துறந்தான், மூவர் படுகாயத்துடன் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்.

கொடாது வைத்தீட்டிற நிழப்பர்:—சென்ற சனிக்கிழமை இரவு முல்லெரியாவா என்னுமிடத்தில் உத்தரவு பெற்று ஈடு பிடிப்பவனாகிய பெறுமொன்னும் எழுபதுவயதுச் சிங்களவன் ஒருவன் கொலைசெய்யப்பட்டான். அவனுடைய ஈயாக் குணத்தினால் அவ்வூரவர்கள் அவனை லோபி என்னும் பேரால் அழைப்பர். அவனுடைய வீட்டினுள் கள்வர் புகுந்து அவனைக் கட்டியபின் அவனுடைய கழுத்தையும் வெட்டி அங்குள்ள விலையேறப்பெற்ற பொருட்களையும் கவர்ந்துகொண்டு சென்றனர். இக்கொலையிற் சம்பந்தப்பட்டோர் இன்னும் அகப்படவில்லை.

அல்லுகோல்லே:—கடந்த ஆண்டில் அமெரிக்காவில் மோட்டோர் விபத்தில் 11006 பேர்கள் இறந்திருக்கின்றனர். அவ்வருடத்தில் அதற்கு முந்திய வருடத்தைவிட 1493 பேர் அதிகம்.

துறவியமனிதரும் அவர்களுடையநகரமும்:—பேர்லின் பட்டினத்துக்குச் சமீபத்தில் துறவிய மனிதர்கள்வசிக்கும் ஒருநகரமிருக்கிறதாம். அதில் அறுபதுபேர் வரையில் இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் வசிக்கும் வீதிகளும் உத்யோக ஸ்தானங்களும் கடைகளும் அவர்களுக்கேற்றவாறு அமைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

ஒட்டகங்களுக்குச் சுருட்டு:—மொராக்கோ தேசத்தில் ஒட்டகங்களைப்பழக்கும் சுதேசிகள் புகையிலைச்சுருட்டை முக்கோண வடிவமான மரக்குழாயில்வைத்து அதன்வழியாகப் புகையை இழுக்கச் செய்கிறார்கள். ஒட்டகங்களும் புகை யிழுக்கும் விதத்தை சீக்கிரம் கற்றுக்கொண்டு வாயினால் இழுத்த புகையை மூக்கினால் வெளியே விடுகின்றனவாம். இதனால் ஒட்டகங்கள் சீக்கிரம் சாதுவாக்கப்படுகின்றன வென்றும் ஒருதடவை புகைபிடிக்கப் பழகிய பின் அப்பழக்கத்தை விடாதென்றும்சொல்லப்படுகிறது.

தற்கொலை:— போலீஸ் சப் இன்ஸ்பெக்டராகவிருந்த மிஸ்டர் கென்னடிஎன்பார் சென்ற வியாழக்கிழமைகாலைதிருவல்லிக்கேணிக் கடற்கரையில் உயிர் நீத்துக் கிடந்தார். திருவல்லிக்கேணிப் போலீசார் சவத்தை அங்கிருந்து பெரியவைத்தியசாலைக்குக்கொண்டுபோய்,அதைப்பற்றி விசாரித்து அவர் தற்கொலை புரிந்துகொண்டதாகத் தீர்மானித்தார்கள். அவர், கோட்டையில் தம் நண்பர் ஒருவரின் வீட்டிலிருந்து ஒரு ரிவால்வர் எடுத்துக் கொண்டதாகவும் அதைக்கொண்டு தற்கொலை புரிந்து கொள்ள தீர்மானித்ததாகவும் கமிஷனருக்கு ஒருகடிதம் எழுதித் தம்சட்டைப்பையில் வைத்திருந்தார். அவர் அந்தத் துப்பாக்கியால் கன்னத்தில் சுட்டுக்கொண்டார். துப்பாக்கி அவர் பக்கத்தில் இருந்தது. நவசக்தி.

குதிரைப்பந்தயத்தில் குதிரையைச்செலுத்திய மாது:—இங்கிலாந்தில் அநேக பந்தயக் குதிரைகளின் சொந்தக்காரரும் குதிரைகளை ஏற்றுமதி செய்பவருமாகிய மிஸ்டர் எர்னஸ்ட் டானர் என்பவரின் புத்திரியாகிய மிஸ்பெட்டி டானர் என்னும் மாது சமீபத்தில் நடந்தேறிய குதிரைப்பந்தயத்தில் ஒரு குதிரையைச் செலுத்தினள். குதிரைச் சவாரிசெய்வதில் அவள் அதிக தீரமும் திறமையும் வாய்ந்தவள். இரண்டாவது சார்ல்ஸ் மன்னர் 1665-ம் வருடத்தில் ஆரம்பித்து அக்காலம் முதல் வருடா வருடம் நடைபெற்றுவரும் குதிரைப்பந்தயத்தில் முதன்முதலாக மேற்படி மாது ஒரு குதிரையைச் செலுத்தினள். குதிரைப்பந்தயத்தில் ஒரு பெண் ஒரு குதிரையை செலுத்தியது இதுவே முதலாவதாகும். "பணம்."

### தேகவியோகம்.

நல்லூர் கயிலாயபிள்ளையார்கோயிற் குருக்களாகிய ஸ்ரீமத் கோ. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் இரணநோய்வாய்ப்பட்டுசகலரும்காத்திராதபிரகாரம் சென்ற புதன்கிழமை இரவு தேகவியோகமாயினர்.

## கடிதம்.

### நவாலி சைவ வாலிபர் சங்கம்.

இப் பெயர்கொண்ட சங்கமொன்று நவாலியிலுள்ள சைவவாலிபர்களினாலே தொடக்கப்பட்டிருக்கின்றது. இதன் காரிய நிகழ்ச்சிக் கூட்டம் ருதிரோற்காரி௵ கார்த்திகை௴ 24௳ ஞாயிற்றுக்கிழமை 3 மணியளவில் நவாலியிலுள்ள "குமாரகோட்டம்" என்னும் இல்லத்தில் நிகழ்ந்தது.

அப்பொழுது திரு. ச. நவரத்தின உபாத்தியாயரவர்கள் சபைத்தலைவராகவும் திரு. வீ. சண்முகதாசனவர்கள் அமைச்சராகவு(மிருந்) கூட்டத்தை நடத்தினார்கள். தமிழ் வேதமோதிக் கூட்டம் தொடங்கப்பட்டது.

அச்சங்கத்துக்கு திரு. க. சோமசுந்தர உபாத்தியாயர் அவர்கள் சபைத்தலைவராகவும் திரு. பராசசிங்கமவர்கள் உதவிச்சபைத்தலைவராகவும் திரு. ச. தெய்வேந்திரசிங்கமவர்கள் சங்க அமைச்சராகவும் திரு. வீ. சண்முகதாசனவர்கள் உதவியமைச்சராகவும் திரு. த. கணபதிப்பிள்ளையவர்களும் திரு. க. செல்வத்துரையவர்களும் நிதித்தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இச்சங்கத்துக்கு "சைவபாநு" என்னும் பெயரையுடைய ஒருபுதினப் பத்திரிகை எழுதி வாசிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கு திரு. இ. பொன்னம்பலமவர்களும் திரு. சோ. பாலசுப்பிரமணியமவர்களும் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டார்கள். இவர்களோடு திரு. அ. நவரத்தினமவர்களும் திரு. கு. பராசசிங்கமவர்களும் திரு. வை. மயில்வாகனமவர்களும் திரு. ப. செகராசசிங்கமவர்களும் திரு. மு. அம்பலவாணரவர்களும் திரு. ஆ. குலசிங்கமவர்களும் திரு. அ. வீரவாகு அவர்களும் காரிய நிர்வாக சபையாராக நியமிக்கப் பட்டார்கள்

திரு வீ. பொன்னம்பலம் திரு சோ. திரு ஞானசம்பந்தர் திரு ப. பராசசேகரம் திரு ச. வன்னியசிங்கம் திரு த. வேலாயுதம் என்பவர்கள் முதலாக 15 பேர் அங்கத்தவர்களாக அன்றைக்குச் சேர்ந்திருக்கிறார்கள்.

சைவசமய உண்மையை ஆராய்ந்தறிந்து அதன் வழி ஒழுகச் செய்தலே இச்சங்கத்தின் நோக்கமாம்.

இதற்குப் பேருதவியாக (Patron) நவாலியுடையார் திரு R. P. வீரசிங்கமவர்களைச் சங்கத்தார் வேண்டிக்கொள்ள அவர் அன்புடன் உடன்பட்டார்.

இச்சங்கம் நீடூழிதழைத்தோங்கி வளரச்சிவபெருமான் திருவருள்புரிவாராக.

இங்ஙனம்,
ச. தெய்வேந்திரசிங்கம்;
சங்க அமைச்சர்.

### மாணிக்ககங்கைப் பெருக்கினால் அடியார்கள் படுங் கஷ்டம்.

இவ்வுலகத்திலே சத்திரம், நந்தாவனம், கிணறு, தண்ணீர்ப்பந்தர், வழி முதலியன அமைத்தலே ஆ தருமங்கள் எல்லாவற்றிலும் சிறந்தன என்பது எங்கள் சமயநூற்றுணிபாகும். எந்நாட்டினும் சிறந்த இவ்விலங்கையில் அதிசிரேஷ்டமுடையதும் பக்த சிரோமணியாகிய அருணகிரிநாதராற் பாடல் பெற்றதும் கலியுகவரதராகிய ஸ்ரீ, சுப்பிரமணியப்பெருமான் அருள்வடிவாக எழுந்தருளியிருப்பதும் கதிர்காமமாகிய ஸ்தலமேயாகும். இந்த ஸ்தலத்தில் நடைபெறும் திருக்கார்த்திகை உற்சவ தரிசனத்துக்குத் தெமைமாரு மார்க்கமாகச் செல்லும் அடியார்கள், மாணிக்ககங்கைப் பெருக்கினால் படுங் கஷ்டங்கள் அளப்பில. இதனைக் கண்ணுற்ற தருமசீலர்கள் மாணிக்க கங்கையைக் கடந்து செல்வதற்காகக் கயிறு கட்டி விடுவதுமுண்டு. அவ்வூரில் வசிக்கும் பணம் பறிக்கும் படுபாவிகள் கயிற்றை அவிழ்த்து மறைத்துவிடுகிறார்கள், அந்தோ! பரிதாபம்!! இவ்வித பேராபத்தைச் சிவனடியார்களுக்குச் செய்யும் பரமசண்டாளரை அவ்வூரவர்களாவது அரசினராவது கவனித்தல்வேண்டும். எங்கள் அரசினரால் அநேக வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் இது ஒரு பெருங்குறையாக விருக்கிறது.

எமது காருண்ய அரசினர் அடுத்த வருஷத்தில் வரும் திருக்கார்த்திகை உற்சவகாலத்தில் தகுந்த வசதிகளைச் செய்வார்களென்ற நோக்கத்துடனே இதை வெளியிடத் துணிந்தேம்

இங்ஙனம்,
ச. கோ. வி. நா. தி.
பண்டாரவளை.

### அந்தணர்கடமையும் அல்லார்கடமையும்

நம் சைவசமயப் பிரமாணியநூலாகியவேதாகமங்களிலே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரரென்னும் நான்கு வருணத்தினரும் முறையே பிரமாவினுடைய முகம், தோள், தொடை, பாதமென்னும்நான் கிடங்களினின்றும் தோற்றினரெனக் கூறப்பட்டிருக்கின்றது ஆயினும் அறிஞர்களிற் சிலர் இந் நான்கு வருணங்களும் இடையிற்சிலராற் கட்டுப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் அக்கட்டுப்பாடு அழியாது என்றும் நிலைக்கும் வண்ணம் அதற்கேற்ற சில பகுதிகளை வேதாகமங்களில் அக்காலத்து அவர்கள் சேர்த்திருத்தல் வேண்டுமெனவும் அனுமானிக்கின்றனர். எங்ஙனமாயினுமாகுக. பக்குவநிலையிற் கீழ்நிலைப்பட்டோராகிய யாமனைவேரும் அக்கட்டுப்பாட்டிற் கமைந்து நடக்கவேண்டியவர்களாயே யிருக்கின்றேம். ஒருவற்கு மேலானபக்குவநிலை கைகூடும்பொழுது சாதியாசாரக் கட்டுப்பாடுகள் எல்லாம் அவனை விட்டு நீங்கி விடுகின்றன ஆயினும் அப்பக்குவகாலம் வந்து அவைகள் தாமாக நீங்கினால் நீங்கலாமேயன்றி ஒருவன் அவற்றை வலிந்து தள்ளிவிடுதல்கூடாது. அங்ஙனம்தள்ளிவிட்டால் அது அவனை இன்னும் கீழான நிலையிலே செலுத்திவிடும். எதுபோலவெனின், பூசினிக்கொடியிற் பிஞ்சு உற்பத்தியாகும் பொழுது உடன் காணப்படும் பூவானது பிஞ்சு கொஞ்சம் கொஞ்சமாய்ப் பருத்து முற்ற விழுந்து போகின்றது. ஆனாற் பிஞ்சு முற்றுவதன் முன்னர்ப் பூவைப் பிரயோசனமற்றதானே யென்றெண்ணிக் களைந்து விடுவோமேயானாற் பிஞ்சு பழுது பட்டுப் போய்விடும். அதுபோலவென்க.

நான்கு வருணத்தாருள்ளும் பிராமணர் வேதாகமங்களை யோதி அவற்றின் வழி நடந்து உலகினரையும் அந் நன்னெறிவழி யுய்த்தற்குரியவர்களா யிருக்கின்றனர். இன்னும் இம்மை மறுமையின்பங்கட்கு ஏதுவாகிய யாகாதிகிரியைகளையும் தேவபூசை முதலியவைகளையும் செய்தற்கும் செய்வித்தற்கும் உரியவர்களாயு மிருக்கின்றனர். இக்காரணங்களாலும் பிரமாவினுடைய முகத்தினின்றும் உற்பத்தியான காரணத்தினாலும் உலகத்திலேயுள்ள எவ்வகைப் பிறப்புக்களிலும் அந்தணர் அதிக விசேடமுடையவர்களாயிருக்கின்றார்கள் பிராமணருக்கு உரியதொழில்கள் எவை என்பதும் அவர்கள் எவ்வியல்புடையவர்களாயிருத்தல் வேண்டுமென்பதும் ஆன்றோர் அவருக்கிட்ட நாமதேயங்களை ஆராய்வினால் நன்கு விளங்கக்கூடியதாயிருக்கிறது. எங்ஙனமெனிற் சிலகாட்டுவல்.

பிராமணர் என்னும் பதம் பிரமசமீபிதர் எனப் பொருள்படும். அந்தணர் என்னும் பதம் அழகிய தண்ணளியை யுடையோர் எனப் பொருள் படும். வேதியர் என்னும் பதம் வேதங்கட்கு அதிகாரிகள் எனப் பொருள்படும். அறுதொழிலாளர் என்னும் பதம் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல் ஏற்றல் என்னும் அறுதொழில்களையும் உடையோர் எனப்பொருள்படும். தீவளர்ப்பவர் என்னும் பதம் ஆகவநீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி என்னும் முவகையக்கினிகளையும் வளர்ப்பவர் எனப்பொருள்படும். மற்றவைகளும் இப்படியே. ஆகவே பதி பசு பாச லக்ஷணங்களையுணர்த்தும் வேதாகமங்களையோதி அவற்றிற் கூறப்படும் திரிபதார்த்தலக்ஷணங்களையும் ஐயந்திரிபின்றியுணர்ந்து, அவ் வேதாகமங்களிற் கூறப்படும், ஆசார நெறிவழியொழுகி, நித்யாக்கினி வளர்த்து, வேதாகம வொழுக்க முறைகளை மற்றை உலகினர்க்கும் போதித்து, ஆன்மார்த்த பரார்த்த பூசைகளை விதிப்படி யியற்றி கோபம் மோகம் முதலிய குற்றங்களைக் கடிந்து தம் சிஷ்யவர்க்கத்தினரால் உதவப்படும் காணிக்கைப் பொருளினாற் சீவியஞ்செய்தலே அந்தணர்கடமையாம் என்பது தெளியப்படும். இவ்வாற்றான வேதாதிகளிற் கூறப்படும் நெறிவழியொழுகும் அந்தணர் தம்சிஷ்யவர்க்கத்தினரையும் நற்கதி யுய்த்துத் தாமும்நற்கதி யுறுவார்,

அந்தணர் தங்கீழுள்ள எல்லா வருணத்தினரையும் நன்னெறியுய்த்தற் குரியவர்களாயிருக்கின்றனர். அஃதவர் கடமையாகும். இது காரணத்தினாலேயே மனுதரும சாஸ்திரத்தில் "பிராமணன் ஒருவனிடத்திற்றானம் வாங்கினும் தன்பொருளையே சாப்பிடுகின்றான். தன் வஸ்திரத்தையே உடுத்துகின்றான். தன்சொத்தையே தானஞ்செய்கின்றான். மற்றவர்கள் அவன் தயையினாலே அவற்றை அனுபவிக்கின்றார்கள்" எனக் கூறப்பட்டிருக்கின்றது. வேதாகமங்களோதி உண்மைநெறி கடைப்பிடித்துத் தருமநெறிகளில் உலகினரை உய்த்தற்பொருட்டே பிராமணர் உண்டாக்கப் பட்டிருக்கின்றார்கள் "பிராமணன் பிறப்பானது தருமத்தின் அழிவில்லாத உருவமாக விருக்கின்றது. தருமம் விளங்கும் பொருட்டு உற்பவித்த அந்தப் பிராமணன் ஞானத்தினாலே மோக்ஷத்திற்குரியவனாகின்றான்" என்னும் மனுஸ்மிருதிவாக்கே அதற்குச் சான்றாகும்.

இன்னும் அந்தஸ்மிருதியிலேயே "சராசரங்களுக்குள் பிராணனுள்ளபுழு முதலியன உயர்ந்தன. அவைகளைப்பார்க்கிலும் அறிவோடுசீவிக்கிற பசு முதலியவை யுயர்ந்தன. அவற்றினும் மனிதர்கள் உயர்ந்தவர்கள். அவரினும் வேதப்பொருளை யறிந்த பண்டிதர்கள் உயர்ந்தவர்கள் அவரினும் விதிவிலக்குகளை நிச்சயமாயறிந்தவர்கள் உயர்ந்தவர்கள். அவரினும் விலக்கியவற்றை யொழித்து விதித்தன வற்றைச் செய்பவர்கள் உயர்ந்தவர்கள். அவரினும் விருப்பு வெறுப்பின்றிப் பிரமத்தையறியும் ஞானிகள் உயர்ந்தவர்களாகும்"எனக் கூறப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் கூறப்பட்டவர்கள் ஒருவர்க்கொருவர் உயர்ந்தவர்களா யிருக்கின்றார்கள். ஒருவருடைய உயர்வுக்கும் இழிவுக்கும் அவரவர் அறிவொழுக்கங்களே காரணமாகின்றன. ஆகையால் இயலக்கூடியவளவு அறிவொழுக்கங்களால் மேம்பட்ட சற்பாத்திரராயுள்ள அந்தணர்க்கே தானம் முதலியன வழங்கல் வேண்டும். அவர்களைக் கொண்டே எமக்கருகமாகிய கிரியைகளையும் நடாத்துவித்தல் வேண்டும். அபாத்திரர் கையிற்றானமும் அவராற் செய்யப்படும் கிரியையும் ஒருபோதும் பலனையளிக்க மாட்டாது. பலனையளிக்கமாட்டாமையோடமையாது செய்தோர் செய்வித்தோரையும் நரகில் வீழ்த்திக் கெடுத்துவிடும். பாத்திரம் என்னும் பதம் பாவமாகிய கடலிற் பட்டோரைச் சிவனது போதாமமாகிய கரையிற் பொருத்தும் வண்ணம் செலுத்தியிருப்பவன் எனப் பொருள்படும். சற்பாத்திரரும் அசற்பாத்திரரும் முறையே மரக்கலத்திற்கும், கற்றெப்பத்திற்கும் சமானமானவர்களெனச் சிவதருமோத்தரம் கூறும்.

அந்தணர் மற்றவைகளிற் சிறிதேனுங் குறையுடையோரா யிருப்பினும் ஒழுக்க வகைகளிற் சிறிதளவுங் குறைவுடையராயிருத்தல் சாலாது இதுபற்றியன்றே தெய்வப் புலமைத்திருவள்ளுவநாயனாரும் தம் பொய்யாமொழியில் "மறப்பினுமோத் துக்கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கங்குன்றக் கெடும்" என ஒழுக்கத்தை வற்புறுத்தி யுரைத்தருளினார். (வரும்).

இங்ஙனம்,
வீ. நடராசன்,
உபாத்தியாயன்,
மீசாலை.

## இந்திய சமாசாரம்.

### சுதேச நீராவி யந்திரம்.

திருவாங்கூரில் உதவிக்கணித உத்தியோகஸ்தராகிய ஸ்ரீ பி. டேனியல் பி. ஏ. என்பவர் குமாரர் ஸ்ரீ பி. அட்டிசரியா என்னும் மாணுக்கர் புதிதாக ஒருநீராவியந்திரம் கண்டு அதைத் திருவனந்தபுரத்தில் நடந்த பொருட்காட்சிச்சாலைக்கு அனுப்பியிருந்தார் என்றும் அதைக் கண்டவர்களெல்லோரும் ஆச்சரியமடைந்தாரென்றும் பாய்லரும்(Boiler)மற்றுமுள்ள முக்கியபாகங்களும்இவ்விடத்திலேயேசெய்யப்பட்டனவென்றும் 'ஹிந்து' பத்திரிகைக்கு அதன் திருவாங்கூர் நிருபர் எழுதியிருக்கிறார். தென்னாட்டில் இதுவே முதன்முதல் வெளியாகும் இயந்திரத் தொழின் முயற்சி. இஃதன்மையினால் எங்கள் தேசம் பெருமையடையுமல்லவா?

### பிரிந்தவர் கூடேல்.

சில வருஷங்களுக்கு முன் பாபு (சர்) சுரேந்திர நாத பானர்ஜியும் காலஞ் சென்ற பாபு மோதிலால் கோஷும் பகிரங்கமாகக் கட்டிக்கொண்டபோது ஆங்கிலோ இந்திய பத்திரிகைகள் பரிகசித்து எழுதின. கீழ் நாட்டவர்களுக்குப் பரம்பரையாகவே இவ்வித வேஷம் உண்டு என்று வரைந்தன. இப்போது இங்கிலாந்தில் ஷியூகாஸில் மேடையில் பகிரங்கமாகவே மிஸ்டர் லாயிட் ஜார்ஜும் மிஸ்டர் ஆஸ்க்வித்தும் ஆவலுடன் நெருங்கி கைகுலுக்கிக்கொண்டதைப்பற்றி இவைகள் என்ன எழுதுமோ? இரண்டிடங்களிலும் முன்பு சண்டை போட்டுக் கொண்டவர்களே பிறகு கூடிக்கொண்டார்கள், வேற்றுமை யுணர்ச்சி நீங்கி மனம் ஒருமைப்பட்டதற்கு அடையாளமே இரண்டிடங்களிலும் விளங்கின. ஆகவே உணர்ச்சி யென்பது இந்தியருக்கே உரியதுமல்ல; இராஜிய உறுதியும் ஆளும் திறனும் பிரிட்டிஷாருக்கும் மேனாட்டவருக்கும் மாத்திரமே உரியனவுமல்ல.

### கிராமவாழ்க்கை செழிக்கவேண்டும்.

பிரதம மந்திரி மிஸ்டர் பால்ட்வின் ஓரிடத்தில் பேசியபோது நகரவாழ்க்கையை விரும்பி ஜனங்கள் கூடுவதனாலும் கிராமவாழ்க்கையிற் சரியான அபிவிருத்தியை ஏற்படுத்தாம விருப்பதாலும் தேசம் கீழ்நோக்கிச் செல்லுகிறது என்று தமது கட்சியினர் நினைப்பதாகக் கூறியிருக்கிறார். பல நூற்றாண்டுகளாகத் தொழிற்சாலைகளிலேயே நம்பிக்கைவைத்து ஜனசமூகத்தை ஓரிடத்திலேயே கூடுமாறு செய்து பல நோய்களுக்கும் பஞ்சத்திற்கும் உறைவிடமாக்கிவிட்டு இப்போது கிராமவாழ்க்கையைச் சிறப்படையச் செய்வதில் நம்பிக்கை தோன்றியிருக்கிறது. இதுவே தேச மேன்மைக்கும் ஜனசமூகத்தின் ஆரோக்கியத்திற்கும் சிறந்த வழியென்பது அநுபவத்திற் காணப்பட்டது. அநாதிகாலமாக நம்இந்தியாவில் கிராமவாழ்க்கை எதற்கும் அடிப்படையாக நிலவி வந்திருக்கிறது. இந்த நிலை கெடக்கூடாதென்பதே அறிவாளிகள் பலரும் விரும்புவது. தொழிற்சாலைகளை ஏராளமாக ஸ்தாபித்துத் தேசத்தைப் பாழாக்கலாகாது என்றே மகாத்மா காந்தியும் கிராமத் தொழில்களை ஒப்பிக் கிராமப் பஞ்சாயத்துகளை மீண்டும் ஒழுங்குசெய்யுமாறு நம்மைக் கேட்கிறார். உண்மையான தேசபக்தர்கள் வீண்பெயருக்கும் பதவிக்கும் ஆசைகொள்ளாமலும் பத்திரிகைகளில் பெயர் விளங்க வேண்டுமென்ற இச்சைகொள்ளாமலும் நிர்மாண திட்டங்களைக் கைக்கொள்ள முன்வருவார்களா? "நவசக்தி"

### பரோடா மன்னருக்கு வரவேற்பு.

பரோடாமன்னரவர்கள் இங்கிலாந்திலிருந்து திரும்பி இந்தியாவந்து சௌக்கியமாய்ச் சேர்ந்துவிட்டார். பம்பாய்மாகாண இந்துமகாசபை சென்ற 23௳ வெள்ளிக்கிழமை அவர்களை அரண்மனையிற் பேட்டிகண்டு அவருக்கு வரவேற்புப் பத்திரம் படித்துக்கொடுத்தார்கள். அதில் அவர்கள் மன்னரைக் கேட்டுக்கொண்டுள்ள விஷயங்களாவன:—

1. பரோடாவிலுள்ள ஒதுக்கப்பட்டவகுப்பினர்களுக்குப் பொதுக் கோயில், குளம், கிணறுகளை உபயோகித்துக்கொள்ளும் உரிமையை அளித்து அவர்களைச் சமமாகப் பாவிக்கவேண்டும்.

2. குழந்தை விவாகத்தை அடியோடு நிறுத்தச் சட்டத்தை அதிகமாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்.

3. சமஸ்தானத்தில் எங்கும்தேசப்பயிற்சி ஆஸ்ரமங்களையும், பிரமசரிய ஆஸ்ரமங்களையும் ஸ்தாபிக்கவேண்டும்.

4 பண்டிதர்களைக்கொண்டு கதா காலக்ஷேபங்கள் மூலமாகஜனங்களுக்கு இந்துமத தர்மத்தைப் போதிக்கச்செய்யவேண்டும்.

5 சமஸ்தான பள்ளிக்கூடங்களில் இந்து மாணவர்கள் யாவருக்கும் மதக்கல்வியைக் கட்டாயப்பாடமாக வைக்கவேண்டும்.

6. ஒதுக்கப்பட்ட வகுப்பினர்களை "அந்தயாஜ்" என்று அழைப்பதை விடுத்து இனி அவர்களை "வங்கர்" அல்லது 'லக்ஷ்மிவி' என்றழைக்கவேண்டும்.

7. மன்னர் அவர்கள் தாயநாட்டிலேயே இருந்துகொண்டு பரோடா சமஸ்தானத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்து அதை இந்தியர்களுக்குள் முதன்மையானசமஸ்தானமாகச் செய்யவேண்டும். லக்ஷ்மி போதினி,

## மகாத்மா காந்தியும் சுவாமி விவேகாநந்தரும்.

இப்பூவுலகின்கண் நம் இந்தியா ஒரு புண்ணிய பூமியாகும். இத்தேசத்தில் அநேகம் பெரியார்கள் உள்ளனர். ஆனால் சில திலகங்கள் நமது கண்ணுக்கு மறைந்துள்ளன. மறைந்தோர்களில் சுவாமி விவேகாநந்தரும் ஒருவராவர். அவர் பெரிய வேதாந்தி. அவர் நம் ஹிந்துமதத்திற்குப் புத்துயிரளிட்டினார். அவர் நம்மதத்தின் கோட்பாடுகளைப் பார்த்து மிகவும் மகிழ்ந்து தெருக்கள்தோறும் பரவச்செய்தார். அவரே நாம் நமது குறைகளுக்கு என்ன செய்யவேண்டும் என்று கூறியுள்ளார். இவ்விதையை காட்டினவர் தாதாபாய்நௌரோஜியவர். அதைப் பயிர்செய்தவர்கள் பாலகங்காதரதிலகரும், கோபாலகிருஷ்ணகோகலேயுமாவார்கள். இவர்கள் எல்லோரும் மறைந்துள்ளார்கள். ஆனால் சில நண்பர்கள் அவர்கள் வளர்த்த மரம் பட்டுப்போய்விட ஏற்பாடுகள் செய்தபோதிலும் அதற்கு இடங்கொடாமல் நமது மகாத்மா காந்தி அதை மறுபடியும் பச்சை மரமாகச் செய்துள்ளார். இவர் இப்பொழுது அம்மரத்தில் பழம் பழுக்கச்செய்து பிறருக்கு இன்பத்தைக் கொடுக்க விரும்புகிறார். இது இப்படியிருக்க நாம் சற்று மதசித்தாந்திகளுக்கு முதன்மைத் தலைவரான சுவாமி விவேகாநந்தரின் நோக்கைப் பார்ப்போம்.

ஒருவர் சுவாமியைக் கண்டபோது, இந்திய தேசிய மகாசபையைப்பற்றிச் சுவாமி பின்வருமாறு கூறியுள்ளார். "நான் அதிகமாக இதில் இருப்பவன் அல்லன். என்னுடைய நோக்கம் வேறு. இருந்தாலும் நான் இந்திய தேசிய மகாசபையின் கருத்து நலன்தான் என்று கூறுவேன். அல்லாமலும் நான் அதனுடைய ஐயத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்" என்றார் மற்றும் இவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

### கல்வி.

கல்வியானது சில படித்தவர்களிட மிருந்தாற் போதாது. நமது பாமர ஜனங்களுக்குக் கல்விப்பயிற்சி செய்யவேண்டும். பிறகு ஜனங்கள் அவரவர்களாலியன்ற வேலைகளைச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் இந்தியாவின் பெருமை பிறருக்கு விளங்குமென்றும் கூறியுள்ளார். சுவாமியை 'ஹிந்து' சிருபர்பேட்டிகண்டு, இந்தியாவானது ஜப்பானுடைய முறையைக் கொள்ள முடியுமா வென்று கேட்டதற்குப் பின்வருமாறு சுவாமிகள் கூறியுள்ளார். 'இந்தியாவிலுள்ள முப்பத்து மூன்று கோடி ஜனங்களும் சேர்ந்தாலொழிய முடியாதென்றும் அதற்குஎன்னகாரணமென்றால் 'இந்த உலகத்திலுள் ஜப்பான் கைத்தொழிலில் சிறந்து விளங்குகின்றது. அக் கைத்தொழில் வெகு நாகரிகமாயிருக்கிறது. ஜப்பானியர்கள் நம் நாட்டைப் பெரிய புண்ணியபூமியென்று நினைத்து இவ்விடத்திலேயே மகான்களிருக்கிறார்களென்று நினைக்கிறார்கள்.' அதற்கு மேற்படி நிருபர் ஜப்பான் மகிமைக்கு யாது காரணமென்று கேட்க, சுவாமி ஜப்பானியர்கள் தம் தேசத்தில் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்துவருகிறார்கள். அவர்கள் தேசத்தினிடம் அன்புடையவர்களாயிருந்துவருகிறார்கள். அதுபோலவே இந்தியாவில் முதுகு எலும்பு முதற்கொண்டு தேசத்தின் பொருட்டாக அர்ப்பணஞ் செய்ய மனிதர்கள் தோற்றினால் அப்பொழுதுதான் இந்தியாவெகு உன்னத நிலைமைக்கு வரும் என்றும் கூறியுள்ளார். ஆனால் இந்தியர்கள் தங்களுடைய குடும்பங்களுக்கே எல்லாவற்றையும் பிரயோஜனப்படுத்துகிறார்கள். அதன் பொருட்டு அர்ப்பணஞ் செய்கிறார்கள். மற்றும் நாம் சாத்வீகத்திலேயே நமது குறைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். ஆயுதப்போர்கூடாதென்று கூறியுள்ளார். ஆயுதப்போர் செய்வோமாகில் நாம் மாள்வோமென்பதில் சந்தேகமில்லையென்றும் கூறியுள்ளார். இந்தியாவின் பாமர ஜனங்களுக்கு மதக்கல்வி புகட்டித் தீண்டாமையை ஒழித்து சரிசமான மாக்க வேண்டும். மற்ற விடங்களிலும் இப்படியே தேசக்ஷேமத்தின் பொருட்டுக் கூறியுள்ளார். அதுபோல மஹாத்மாகாந்தியும் செய்துளார் என்பதைப் பற்றிப் பின்னால் அறிந்துகொள்ளலாம். மஹாத்மாகாந்தி இந்திய வியாபாரத்தின்பொருட்டு அநேகம் தடவை இதைவிருத்திசெய்ய வேண்டுமென்று கூறியுள்ளார். மஹாத்மா காந்தி 1919-ஆண்டு ஆகஸ்டு மாதம் 18உ தம்முடைய பத்திரிகையில் பின்வருமாறு கூறியுள்ளார். நம் இந்தியாவில் அநேகங்கைத்தொழில்களிருக்கு இந்தியா வர்த்தக சங்கத்தார் கெடுத்து விட்டார்கள். நம்முடைய தேசத்திலிருந்து அநேக பவுண்டு பஞ்சுகள் ஏற்றுமதி செய்யப்பட்டு கலிக்கோவாகவும் மற்றவைகளாகவும் வருகின்றன. அவற்றை இந்தியாவில் செய்வோமானால் இங்குள்ளவர்கள் லாபமடையலாமென்று எழுதியிருக்கிறார், வேறு தேசங்களில் நம்முடைய பஞ்சை நூலாக்கிக்கொண்டு துணிசெய்துவிற்றால் நாம் அதை வாங்குவோமானால் நாமும் சோம்பேறிகள் என்று பிறதேசத்தார் நினைப்பார். இதேதான் ஸ்வாமி விவேகாநந்தர் ஜப்பானுக்கும் இந்தியாவுக்குமுள்ள வித்தியாசமென்று கூறினார்.

இதனால் சராசரி நாம் அறுபதுகோடி ரூபா பணத்தை இழக்கின்றோமென்றும் நாம் சுதேசியை விருத்தி செய்தால் அவ் வறுபது கோடி ரூபாய் நமது ஏழைஜனங்களுக்குப் பிரயோஜனமாகுமென்றும் கூறியுள்ளார், மஹாத்மாகாந்தி இதை விரித்துக் கூறியுள்ளார். ஆனால் சுவாமி விவேகானந்தர் சுட்டிக்காட்டியுள்ளார். மஹாத்மகாந்தி இப்பொழுது பாமர ஜனங்களைக் கொண்டுதான் இவ் வியக்கத்தை ஜெயிக்க வேண்டுமென்று சொல்லியுள்ளார். ஏழைகளுக்குக் கல்வி போதித்து அவர்களை நம் மியக்கத்திற்குத் தயாராக்க வேண்டும், தீண்டாமையை ஒழிக்கவேண்டும். அவர்களைக் கெட்ட செயல்களிலிருந்து விலக்க வேண்டும் என்றும் ஆமதாபாத்தில் நடைபெற்ற கிழ் வகுப்பினர் மஹாநாட்டில் விளக்கக் கூறியுள்ளார். விவேகானந்தர் ஒற்றுமையாய்ச் சேர்ந்தால் இந்தியாவானது ஜப்பானைப்போல் சிறப்பாய் வாழலாம் என்று கூறினார். மஹாத்மா காந்தியும் ஒற்றுமை நமக்குள் ஏற்பட்டால் நாம்நமது எதிரிகளிடத்தில்ஒத்துழையாமையை அனுஷ்டிக்கலாமென்று கூறியுள்ளார். ஸ்வாமி விவேகாநந்தர் நமக்கும் ஜப்பானியர்களுக்கும் வித்தியாசமென்னவென்றால் ஜப்பானியர்கள்கைத்தொழிலில்சிறந்துவிளங்குகின்றார்கள். அதுபோலவே நாமும் கைத்தொழிலை அபிவிர்த்திசெய்யவேண்டுமென்றும் அப்படிச் செய்வோமாகில் நமது இந்தியாவும் ஜப்பானைப்போல் விளங்குமென்றும் கூறியுள்ளார். அதுபோலவே இந்தியக் கைத்தொழில்களி லொன்றாகிய ராட்டினத்திலிருந்து மஹாத்மாகாந்தி நூல்நூற்க வேண்டுகிறார், மற்றும் விவேகாநந்தர் நாமெல்லோரும் ஜப்பானியர்களைப்பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதைக்காட்டாமல் ஜப்பானியர்கள் தங்களுடைய தாய்நாட்டில் அன்புடையவர்களா யிருக்கிறார்கள், அவர்கள் உயிரைத் தேசத்திற்காக விடத்துணிந்துள்ளார். அதுபோலவே இந்தியாவில் எப்பொழுது தங்களது முதுகு எலும்பைக்கூட விட மனிதர்கள் தயாராகிறார்களோ அப்பொழுதுதான் இந்தியாவிற்கு கதிசதியுண்டு என்று கூறியுள்ளார். அதுபோலவே இந்தியாவில் தொண்டர்களும், பிரசாரகர்களும் பாமர ஜனங்களை இவ்வியக்கத்தின் உண்மையை உணரச் செயய வேண்டுமென்று மஹாத்மா காந்தி தாமும் அறிந்து பிறருக்கும் இப்புத்திமதிகளைக் கூறியுள்ளார்கள், மற்றும்இவர் சாத்வீகமாய் நம்போரைச் செய்ய ஆயுதப்போர் செய்யக் கூடாது என்று சொல்லியுள்ளார். அதே போலவே மஹாத்மா காந்தி அஹிம்ஸா தர்மத்தினாலேயே நம்முடைய போரை நடத்த வேண்டுமென்று கூறியுளார்.

நாம் தெரிந்துகொள்வது என்ன வென்றால் உலகத்தில் உத்தம சிரேஷ்டர்கள் பிறப்பது நிலைமகளை ஒழிப்பதற்கே.

நமது தலைவராகிய மஹாத்மா காந்தியானவர் மதாபிமானமும் தேசாபிமானமும் உள்ளவர். அம்மாதிரியே விவேகாநந்தர் இதற்கு முன்பே ஒத்துழையாமை யென்ற பெயரிடாமல் அதன் தத்துவங்களைச் சொல்லி யுள்ளார். ஆகவே நாம் இப்பேர்ப்பட்ட புத்திமதிகளைப் பிறருக்கும் சொல்லி நாமும் பின்பற்ற வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

"நவசக்தி"

---

## "நவ சக்தி"

### வார மும்முறைப் பதிப்பு.

சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | ... | ரூபா 15 | 0 |
| ஆறுமாத சந்தா | ... | ,, 7 | 8 |
| மூன்றுமாத சந்தா | ... | ,, 4 | 0 |
| மாத சந்தா | ... | ,, 1 | 8 |

சிங்கப்பூர், பினாங்முதலிய வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூபா 20.

### விளம்பர விகிதம்.

மும்முறைப் பதிப்பு.

| | | |
|---|---|---|
| கலம் 1-க்கு நாள் ஒன்றுக்கு | 8 | 0 |
| சில்லறை விளம்பரம் அங்குலம் 1-க்கு | 0 | 10 |

வாரப் பதிப்பு.

| | | |
|---|---|---|
| கலம் 1-க்கு வாரம் 1-க்கு | 7 | 0 |
| சில்லறை விளம்பரம் அங்குலம் 1-க்கு | 0 | 8 |

நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் நேரே எங்கட்கு எழுதவும்.

மானேஜர் "நவசக்தி",
இராயப்பேட்டை, சென்னை.

---

## ஓர் பிராமணோத்தமர் தேவை.

சிலங்கூர் இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் கோலாலம்பூர் 'ஸ்கொற்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு நன்றாயர்த்தம்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகம் மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமண குடும்பத்தைச்சேர்ந்தவராயு மிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாரம்ப(துவஜாரோகண)த்துக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிக மதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
காரியதரிசி.

(Q. 45)

---

## தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரம் நீராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

(H. 16)

---

## "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

---

## "லோகோபகாரி".

28-வருஷகாலமாக இது தமிழுலகமெங்கும் உலவி வருகிறது. இதில் வேதாந்த விஷயங்களும் எளிய தமிழில் எழுதப்படும் சமாசாரங்களும் இனிய பாடல்களும் சித்திரபடங்களும் வெளிவரும். உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி இப்பத்திரிகை எவருக்கும் அச்சமின்றி, உண்மையைக் கடைப்பிடித்து நடுநிலையான அபிப்பிராயங்களை வெளியிட்டுவரும். நாட்டிலே புத்துயிர் ஏற்பட்டு இந்தியர் சுயராஜ்ய பதவி யடைந்து ஞாலமெல்லாம் இன்பம் அடைய வேண்டு மென்பதே "லோகோபகாரி" யின் முக்கிய நோக்கம் ஸ்ரீமாந். பரலி. சு. நெல்லையப்பபிள்ளை அவர்கள் இதன் ஆசிரியராக இருக்கின்றார். தமிழறிந்த ஒவ்வொருவரும் இதனை ஆதரிக்கவேண்டும். வருஷ சந்தா ரூபா நான்கே. வெளிநாட்டிற்கு ரூபா ஆறு, மாதிரிப்பிரதி இனாம்,

காரியஸ்தர், "லோகோபகாரி"
கோமளேஸ்வரன் பேட்டை, சென்னை.

---

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1892-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று வண்.கிழக்கில் அடைவுபிடிக்கும் கூ. கண. க. நா. சொ. சண்முகம்பிள்ளையிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல. | மா. | தி. | ரூ. | ஊரும் பெயரும் | நகைவிபரம். |
|---|---|---|---|---|---|
| 1922ஆ. | | | | | |
| 4358 | 6 | 17 | 10 | வண்கிழக்கு செ. கந்தசாமி | பொன் கல்மோதிரம் 1 |
| 4426 | 7 | 5 | 70 | திருநெல்வேலி ச. சுப்பிரமணியம் | பொன் கொலுசுக்காப்பு சோடி 1 |
| 4432 | ,, | 6 | 40 | நல்லூர் ச. சுப்பிரமணியம் | பொன் ஒரு கல்லில்லாத கைச்சங்கிலி 1 |
| 4500 | ,, | 20 | 10 | வண்-மேற்கு கா. பொன்னம்பலம் | பொன் ஒருபக்கம் குமிளில்லாத தாயித்து 1 |
| 4501 | ,, | 21 | 220 | வண்-மேற்கு சா. ஆ.கணபதிப்பத்தர் | பொன்பிராஞ்சுக்காசு 4கோத்த தாலிக்கொடி 1, கெட்டிக்காப்பு சோடி 1, கைச்சங்கிலி 1 |
| 4522 | ,, | 27 | 50 | கந்தர்மடம் ச. கனகசபை | பொன் பிராஞ்சுக்காசு 4-ம், தாயித்து 2, புலிநகம் 2, கோத்த அரைஞாண் 1 |
| 4589 | 8 | 10 | 65 | நாவலி க. தம்பிமுத்து | பொன் சங்கிலி 1 |
| 4631 | ,, | 23 | 150 | சண்டிக்குளி மூ. நாகனுதி | பொன் பின்னல்வேலைசெய்த கொலுசுக்காப்பு சோடி 1 |
| 4673 | 9 | 1 | 12 | வண்-கிழக்கு ச. தம்பையா | பொன தாயித்து 1 |
| 4687 | ,, | 3 | 40 | கந்தர்மடம் க. கார்த்திகேசு | பொன் முகப்பில்லாத கருசமணிக்கோர்வை 1, காதப்பூ சோடி 1, கொப்பு சோடி 1, காட்டுககடுக்கன் சோடி 2 |
| 4700 | ,, | 4 | 80 | கந்தர்மடம் வை. செல்லப்பா | பொன் கொலுசுக்காப்பு சோடி 1 |
| 4753 | ,, | 12 | 70 | வண்-மேற்கு கா. பொன்னம்பலம் | பொன் கொலுசுக்காப்பு சோடி 1 |
| 4776 | ,, | 15 | 40 | கந்தர்மடம் வே. நடராசா | பொன் அரைமுடி 1, சலங்கை 37 |
| 4837 | ,, | 23 | 190 | சுலட்டி சி. முத்து | பொன் த. இ. பவுண் 2. மணி 2, கோத்த சங்கிலிக் கொடி 1 |
| 4924 | 10 | 7 | 60 | தட்டாதெரு சி. தாமோதரம்பிள்ளை | பொன் டைமன் க. வை. சங். 1 |
| 4925 | ,, | 7 | 65 | சாவகச்சேரி செ. பரஞ்சோதி | பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 4973 | ,, | 14 | 60 | வண்-மேற்கு கா. பொன்னம்பலம் | பொன் கம்பிப்பூரான் அட்டியல் 1 |
| 4979 | ,, | ,, | 17 | ஆனைப்பந்தியடி ச. பொன்னுத்துரை | வெள்ளிப்பாதசரம் சோடி 1 |
| 5014 | ,, | 18 | 140 | சண்டிலிப்பாய் த கந்தையா | பொன் தாயித்துடன்சங்கிலி 1, அரைமுடியுடன் நூல்கட்டிய அரைஞாண் 1 |
| 5025 | ,, | ,, | 25 | ஆரியகுளத்தடி சி. சுப்பிரமணியம் | பொன் சிறு. பீலிக், காப். சோ 1 |
| 5069 | ,, | 23 | 85 | வண்-கிழக்கு கா. கந்தசாமிப்பத்தர் | பொன் பட்டணக்காப்பு சோ. 1 குண்டுவைத்த தங்கப்பவுண் 2 |
| 5162 | 11 | 14 | 125 | நல்லூர் ஆ. சிவகுரு | பொன் சங்கிலிக்கொடி 1 |
| 5167 | ,, | 15 | 30 | ஆனைப்பந்தியடி ச. பொன்னுத்துரை | பொன் நெளிந்த தாயித்து 1, அரும்புத்தடை 2, சாதா மோதிரம் 1 |
| 5195 | ,, | 18 | 170 | வண்-கிழக்கு மு. தாமோதரம்பிள்ளை | பொன் கம்பிப்பூரணட்டியல் 1 சங்கிலி 1 |
| 5213 | ,, | 20 | 25 | அனலைதீவு ச. வைத்திலிங்கம் | பொன் கருசமணிக்கோர்வை 1 |

விற்பனவு:—ருதிரோற்காரிவருடம் மார்கழி 4உ (19-12-23) புதன்கிழமை காலை பத்து மணி தொடக்கம் மேற்கூறப்பட்ட நகை பிறசிங்களாக ஷை கடையின் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 416).

---

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4 0-0 20-மாத்திரை ரூ 2. வி. பி. சார்ஜ்வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

### ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென் மேலும் பெருகும். தொத்து நோய், அவமிருத்து தோஷம், மேகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
பழனி. S. I.

(Q. 40)

---

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.